**நாணயச் சபை**

**இலங்கை மத்திய வங்கி**

**2021 யூன் 09** **சுற்றறிக்கை** **2021இன் 06ஆம் இலக்கம்**

**கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான சலுகைகள்**

இலங்கையில் கொவிட்-19இன் மூன்றாவது அலையின் தோற்றத்துடன் தொடர்பான கரிசனைக்குரிய தரப்பினர்களிடமிருந்தும் அரச அதிகாரிகளிடமிருந்தும் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்கள்/ வாடிக்கையாளர்களுக்கும் குறிப்பிட்ட சலுகைகள் வழங்குமாறு இலங்கை மத்திய வங்கியிடம் பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. இதற்கமைய கொவிட்-19இன் மூன்றாவது அலை காரணமாக வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் எதிர்நோக்கப்பட்ட சவால்களை ஈடுசெய்யும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கி கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் பின்வரும் சலுகைகளை (இதனகத்துப் பின்னர் திட்டம் எனக் குறிப்பிடப்படும்) வழங்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் (இதனகத்துப் பின்னர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் எனக் குறிப்பிடப்படும்) கேட்டுக் கொள்கின்றது. மேலும், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் கொவிட்-19இன் மூன்றாவது அலையின் காரணமாக பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் அவர்களது கோரிக்கையின் மீது மேலதிக சலுகைகளை, இச்சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்படும் நன்மைகளிலும் பார்க்க குறையாத விதத்தில் ஒட்டுமொத்த நன்மைகளாக வழங்கலாம். இதற்கமைய வியாபாரங்கள்/ வருமான உருவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட தற்போதைய இடையூறுகளினால் பாதிக்கப்பட்ட வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் கடன்பாட்டாளர்கள் அவர்களது கடன்களை உரிய முறையில் திருப்பிச் செலுத்தும் விதத்தில் அவர்கள் மீதான சுமையினைத் தளர்த்தும் நோக்குடன் அனைத்து வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களிடையேயும் இத்திட்டம் ஒத்திருக்கின்றவாறு இச்சுற்றிக்கை விடுக்கப்படுகிறது.

1. **2021 மே 15ஆம் நாளன்று செயற்படும் வகையில் காணப்படும் தற்போதுள்ள கொடுகடன் வசதிகளைப் பிற்போடுதல் அல்லது மறுசீரமைத்தல்**

   (அ) கொவிட்-19இன் மூன்றாவது அலையினால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களின் தற்போதுள்ள கொடுகடன் வசதிகளின் மூலதனம், வட்டி அல்லது இரண்டினையும் அறவிடுவதனை 2021 ஓகத்து 31 வரையான காலப்பகுதியில், வேலையிழப்பு, வருமானம்/ சம்பளங்கள் அல்லது விற்பனைகளில் ஏற்பட்ட குறைப்பு, வியாபாரம் மூடப்பட்டமை போன்ற தகைமையுடைய கடன்பாட்டாளர்களினால் எதிர்நோக்கப்பட்ட நிதியியல் இடர்ப்பாடுகளைப் பரிசீலனையில் கொண்டு, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் ஒவ்வொரு விடயங்களாக ஆராய்ந்து பிற்போடுதல் வேண்டும்.

   (ஆ) தகைமையுடைய கடன்பாட்டாளர்களின் நிதியியல் இடர்ப்பாடுகள் மற்றும் மீள்கொடுப்பனவு இயலாற்றல் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு வழங்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கும் கூடுதலான தற்போதுள்ள கொடுகடன் வசதிகளுக்கு மூலதனம், வட்டி அல்லது இரண்டினையும் பிற்போடும் வசதியை வழங்குதல் வேண்டும்.

   (இ) மேற்குறிப்பிட்ட பிற்போடலுக்காகப் பரிசீலனையில் கொள்ளப்பட்ட வசதிகளைப் பொறுத்தவரையில், பிற்போடப்பட்ட காலப்பகுதிக்காக 2021 மே 19ஆம் நாளன்று உள்ளவாறான 364 நாள் திறைசேரி உண்டியலின் ஏல வீதத்துடன் ஆண்டிற்கு 5.5 சதவீதத்தினைக் கூட்டிய வீதத்தினை விஞ்சாத விதத்தில் (அதாவது 5.18 சதவீதம் + 5.5 சதவீதம் = ஆண்டிற்கு 10.68 சதவீதம்) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் வட்டி வீதமொன்றினை விதிக்கலாம் என்பதுடன் பிற்போடப்பட்ட தொகைக்கு மாத்திரமே அவ்வாறு விதிக்கலாம்.

   (ஈ) மாற்று ஏற்பாடொன்றாக, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவு இயலாற்றலையும் ஏற்றுக்கொள்ளத்தக்க மீளெழுச்சித் திட்டத்தினையும் பரிசீலனையில் கொண்டு தற்போதுள்ள கொடுகடன் வசதிகளை நீண்ட காலப்பகுதியொன்றிற்கு மறுசீரமைத்துக் கொள்ளலாம்.

இவ்விடயத்தில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களும் கடன்பாட்டாளரும் தற்போது நிலவுகின்ற குறைந்த வட்டி வீதங்களைப் பரிசீலனையில் கொண்டு வட்டி வீதமொன்றிற்கு இணங்கிக் கொள்ளலாம்.

(உ) சலுகைக் காலத்தில் அதாவது 2021 மே 15 இலிருந்து 2021 ஓகத்து 31 வரையான காலப்பகுதியில் தண்ட வீதங்கள் ஒன்றுசேர்க்கப்படவோ அல்லது விதிக்கப்படவோ கூடாது.

(ஊ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், தற்பொழுது காணப்படும் பயணத் தடைகள் காரணமாக பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளரிடமிருந்து கடன்களின் மீள்கொடுப்பனவுகளை ஒரு சில நாட்களினால் (உயர்ந்தபட்சம் 10 வேலைநாட்கள்) தாமதிக்குமாறு விடுக்கப்படும் கோரிக்கைகளை, அத்தகைய வசதிகளைப் பிற்போடாமல் அல்லது மறுசீரமைப்புச் செய்யாமல் அனுமதிக்கலாம். வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் அத்தகைய தாமதத்திற்காக மேலதிக வட்டியையோ அல்லது வேறு ஏதேனும் விதிப்புக்களையோ அறவிடக்கூடாது.

(ஏ) 2021 மாச்சு 12ஆம் திகதியில் விடுக்கப்பட்ட 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் குத்தகை மீள்கொடுப்பனவுகளைப் பிற்போடும் வசதி அல்லது 2021 மாச்சு 19ஆம் திகதியில் விடுக்கப்பட்ட 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழான சட்ட இசைவுத்தாமதம் என்பவற்றைத் தற்பொழுது அனுபவிக்கின்ற கடன்பாட்டாளர்கள் மேலே வழங்கப்படும் சலுகைகளுக்கு தகைமையுடையவராகார்.

2. **2021 மே 15ஆம் நாளன்று செயற்படா வகையிலுள்ள கொடுகடன் வசதிகளுக்கான சலுகைகள்**

(அ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் 2021 மே 15ஆம் நாளன்று உள்ளவாறான தற்போதுள்ள செயற்படாக் கடன் வசதிகள், கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவு இயலாற்றல் மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்க மீளெழுச்சித் திட்டம் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு நீண்ட காலப்பகுதிக்கு மீள்அட்டவணைப்படுத்தலாம். இவ்விடயத்தில், வங்கியல்லா நிதியியல் நிறுவனமும் கடன்பாட்டாளரும் வட்டி வீதம் உட்பட நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்குதல் வேண்டும்.

(ஆ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், 2020 ஏப்பிறல் 1ஆம் நாளிலிருந்து 2021 மே 15ஆம் நாள் வரையான காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த அல்லது விதிக்கப்பட்ட தண்ட வட்டி வீதங்களை, அத்தகைய வசதிகள் இத்திட்டத்தின் கீழ் மேலே 2(அ)இல் குறித்துரைக்கப்பட்டவாறு மீள்அட்டவணைப்படுத்தலின் பொருட்டு பரிசீலனைக்கு கொள்ளப்பட்டுள்ளன என்ற நிபந்தனைக்குட்பட்டு தள்ளுபடி செய்ய வேண்டும்.

(இ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் 2020 ஏப்பிறல் 01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ செயற்படாக் கடனாக வகைப்படுத்தப்பட்டிருக்கும் கொடுகடன் வசதிகளுக்கெதிராக 2021 ஓகத்து 31 வரை அனைத்து வகையான அறவிடல் நடவடிக்கைகளையும் இடைநிறுத்துதல் வேண்டும்.

(ஈ) சலுகைகளை வழங்குவது தொடர்பில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மிகையான கட்டணங்களையோ விதிப்புக்களையோ விதிக்கக்கூடாது.

3. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், வெளிப்படையாகவே பாதிக்கப்பட்டவர்களுக்காக கொடுகடன் அட்டைகள் மற்றும் ஏனைய கொடுகடன் வசதிகள் மீதான பிந்திய கொடுப்பனவுகளுக்கான கட்டணத்தினை 2021 யூன் 30 வரையான காலப்பகுதியில் நிறுத்துதல் வேண்டும்.

4. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், இச்சுற்றறிக்கையின் கீழ் கடன்பாட்டாளர் தற்போதுள்ள கொடுகடன் வசதியை/ வசதிகளைப் பிற்போடுவது அல்லது மறுசீரமைப்பதற்கான தேர்விற்குப் பதிலாக 2021 ஓகத்து 31 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அவரின்/ அவளின் தற்போதைய கொடுகடன் வசதிகளைத் தீர்ப்பனவு செய்வதற்கான அவரின் விருப்பத்தினைத் தெரிவிக்குமிடத்து, அவ்விடயத்தில் நேரகாலத்துடனான தீர்ப்பனவிற்கான கட்டணத்தினை விதிக்கக்கூடாது.

5. **இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்திற்கு அறிக்கையிடுதல்**

(அ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், இத்திட்டத்தின் கீழ், தகைமையுடைய கடன்பாட்டாளர்களிடமிருந்தான கடன் விண்ணப்பங்களை கொடுகடன் தகவல் பணியகத்தின் மோசமான பதிவேடுகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நிராகரிக்கக்கூடாது.

(ஆ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், கொடுகடன் தகவல் பணியகத்தின் ஆலோசனையுடன் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பிற்போடல்/ மறுசீரமைத்தல் அறிக்கை தொடர்பில் அறிக்கையிடுகின்ற மாதிரியொன்றினைத் தயாரித்தல் வேண்டும். இதன் மூலம் இத்திட்டத்தில் பங்கேற்பது, எதிர்காலத்தில் கடன்பாட்டாளரின் கொடுகடன் மதிப்பெண்ணின் மீது தாக்கத்தினையோ அல்லது எதிர்காலக் கொடுகடன் தகவல் பணியகத்தின் எதிர்கால அறிக்கைகள் எதிர்மறையான தன்மையினைப் பிரதிபலிக்கவோமாட்டாது.

6. **கோரிக்கையினைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி**

(அ) தகைமையுடைய கடன்பாட்டளா்கள் 2021 யூலை 15 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ எழுத்து மூலமாக அல்லது இலத்திரனியல் வழிமுறையூடாக மேற்குறிப்பிட்ட சலுகைகளுக்கான கோரிக்கையினை விடுத்தல் வேண்டும். வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் அனைத்து தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு அச்சு அத்துடன் அல்லது மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி உட்பட இலத்திரனியல் ஊடகங்களூடாக சலுகைகள், இறுதித் திகதி, சமர்ப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவம் என்பன பற்றி விரைவாக தொடர்பூட்டுதல் வேண்டும்.

(ஆ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் 2021 யூலை 15இற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கையினையும் அத்தகைய கோரிக்கை தாமதமாக செய்யப்படுவதற்கான காரணங்களை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருப்பின் ஏற்றுக்கொள்ளலாம்.

(இ) கடன் மீள்கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கான இயலாற்றலைக் கொண்டுள்ள எவரேனும் தகைமையுடைய கடன்பாட்டாளர் கொடுகடன் வசதிகளைப் பிற்போடுவதற்கான அல்லது மறுசீரமைத்தலுக்கான கோரிக்கைக்குப் பதிலாக, அத்தகைய கடன்களை மீள்கொடுப்பனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றார்.

(ஈ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் கொடுகடன் வசதிகளைப் பிற்போடுவது அல்லது மறுசீரமைப்பது தொடர்பில் கடன்பாட்டாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது என்பதனை ஒப்புதலளிப்பதற்கு முன்னர் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். கோரிக்கையினை நிராகரிப்பது தொடர்பில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் அத்தகைய நிராகரிப்பதற்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

7. **சட்ட இசைவுத்தாமதம் தொடர்பான கணக்கீட்டுப் பரிசீலனைகள்**

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சலுகைகளுக்கான கணக்குகளை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படியும் 2020 திசெம்பர் 31ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் கீழ், இலங்கை மத்திய வங்கியினால், வழங்கப்பட்ட மேலதிக வழிகாட்டல்களுக்கு இணங்கவும் கணக்கீடு செய்யவேண்டும். இது தொடர்பில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கு மேலதிக வழிகாட்டல்கள்/ தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுமிடத்து இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர்களையும் மற்றும் கணக்காய்வாளர்களையும் நாடலாம்.

8. **அறிக்கையிடும் தேவைப்பாடு**

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் கடன்பாட்டாளர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சலுகைகளின் விபரங்களை 2021 யூலை 30ஆம் நாளிலிருந்து ஒவ்வொரு மாதமும் அம்மாதத்தின் 30ஆம் திகதியிலுள்ளவாறு 15 வேலை நாட்களுக்குள் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும். அறிக்கையிடுகின்ற படிவம் காலக்கிரமத்தில் சுற்றோட்டப்படுத்தப்படும்.

ஒப்பம்
**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்